2011 ஆகஸ்ட் 8]

வேலைப்பளுவின் காரணமாக—ஒரு Certificate வாங்க வேண்டுமென்று சொன்னால்கூட ஒரு நாள் ஆகிறது—அந்த நிலையை மாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கவனிக்கவும். இதற்குத் தனிக் கேள்வி போடவும்.*

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

3. விதி 110—ன்கீழ் அறிக்கை

(அ) சுற்றுச்சூழலைப் பாதுகாக்க சிறப்புத் தூய்மைப்படுத்தும் திட்டம் மற்றும் விரிவான திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்துவது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் இரண்டு அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள் அனைவரும் சுகாதாரமான சுற்றுச்சூழலில் வசிப்பதை உறுதி செய்வது எனது தலைமையிலான அரசின் முக்கிய நோக்கம் ஆகும். எனவேதான், மேதகு ஆளுநர் உரையில், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அரசு சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும், கிராமப்புறங்களையும், நகர்ப்புறங்களையும் தூய்மைப்படுத்த ஒரு சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.*

மேலும், 4-8-2011 அன்று, இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட, 2011-2012 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு-செலவு மதிப்பீட்டில், "சென்னையிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மைக்காக ஒரு விரிவான திட்டம் தயாரித்து, கரிம சேமிப்புக்காகக் கிடைக்கப் பெறும் நிதியையும் பயன்படுத்தி, இத்திட்டத்தைச் செயல்படுத்த இவ்வரசு திட்டமிட்டுள்ளது" என்று குறிப்பிட்டிருந்தோம்.

தற்போது, சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள சுற்றுச்சூழல் குறித்த ஒட்டுமொத்த நிலையை நேரடியாகத் தெரிந்துகொள்ளும்பொருட்டு, நான் 5-8-2011 அன்று ஹெலிகாப்டரில் சென்று, வான் வழியாக ஆய்வு செய்தேன். அப்போது, பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் ஆகிய இடங்களில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களையும் பார்வையிட்டேன். இந்த ஆய்வின்போது, சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் ஏராளமான குப்பைகள் கொட்டிக் கிடந்தது தெரியவந்தது. மேலும், சென்னை மாநகரைச் சுற்றியுள்ள சில பகுதிகளில், குடியிருப்புகளைச் சுற்றி, மழை நீர் மற்றும் கழிவு நீர் தேங்கியுள்ளதையும் கண்டறிந்தேன். மிகவும் அசுத்தமாக இருந்தது. எனவே, சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள மக்கள் சுகாதாரமான சூழலை உடனடியாகப் பெறுவதற்கு ஏதுவாக, முதற்கட்டமாக, தேங்கியுள்ள குப்பைகளை உடனடியாக அகற்றவும், குடியிருப்புப் பகுதிகளில் தேங்கியுள்ள அசுத்தமான நீரை அகற்றுவதற்குமான சிறப்புத் தூய்மைப்படுத்தும் திட்டம், அதாவது-Mass Cleaning Programme ஒன்று செயல்படுத்தப்படும். இந்தத் தூய்மைப்படுத்தும் பணிகள், மூன்று மாத காலத்திற்குள் செய்து முடிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனைத் தொடர்ந்து, இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், 2011-2012 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு-செலவு மதிப்பீட்டில் குறிப்பிட்டவாறு, விரிவான திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-55

(ஆ) காற்றாலைமூலம் பெறப்படும் மின்சாரத்தை உயரழுத்தத் தொழிற்சாலைகளுக்கு வழங்குவது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழகத்தின் மின் நிலைமை, நாளுக்கு நாள் மோசமடைந்து, அனைத்துத் தரப்பு மின் நுகர்வோர்களுக்கும் பல மணி நேர மின் தடை அமலில் இருந்தது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். வீட்டுப் பயனீட்டாளர்களுக்கு, சென்னை மாநகரத்தில் ஒரு மணி நேர மின் தடையும், மாநிலத்தின் பிற பகுதிகளில் மூன்று மணி நேர மின் தடையும், நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது இருந்தது என்பதையும் இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.